# மதுரையில் - அரசின் பல்வேறு திட்டப் பணிகளை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்த காட்சிகள்!





பல்வேறு அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் (9.9.2024) மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த போது, திரளாகக் கூடி உற்சாக வரவேற்பளித்த, கழக உடன்பிறப்புகள் – பொதுமக்கள் அனைவருக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நன்றி தெரிவித்துக் கொண்டார்.




மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்களின் நிலை குறித்த ஆய்வுக் கூட்டத்தினை சிறப்புத்திட்டச் செயலாக்கத்துறை சார்பில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் நடத்தினார். இந்தக் கூட்டத்தின் போது, மதுரையில் நடைபெற்று வருகிற வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் அரசுத் துறை சார்ந்த அலுவலர்களின் பணிகள் தொடர்பாக, ஆவணங்களின் அடிப்படையில் பல்வேறு விளக்கங்களைக் கேட்டு ஆய்வு செய்தார். முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திய அரசுத் திட்டங்கள் பொதுமக்களிடம் சரியான முறையில் கொண்டு சேர்க்கப்படுகிறதா? அதுகுறித்த பயனாளிகளின் கருத்துக்கள் என்ன? என்ற கேள்விகளை எழுப்பினார். மேலும், கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் நிலை, இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் வெற்றி போன்றவை குறித்து அதிகாரிகள் அலுவலர்கள் இக்கூட்டத்தின் வாயிலாக எடுத்துரைத்தனர். “கோட்டையில் தீட்டப்படும் திட்டங்கள் தங்கு தடையின்றி மக்களைச் சென்றடையும் வகையிலும், பயனாளிகள் எண்ணிக்கை இலக்கை எட்டும் வண்ணமும் செயலாற்ற வேண்டும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.



பாரா பாட்மின்டன் போட்டிகளில் தொடர்ந்து சாதித்து வரும் மனோஜ், நம் திராவிட மாடல் அரசில் விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் அரசுப்பணி பெற்று பலருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறார். அண்மையில் அவருக்குத் திருமணம் நடைபெற்றுள்ள நிலையில், மதுரை அச்சம்பத்து பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று – மனோஜ் மற்றும் அவரது வாழ்விணையர் லோகப்ரியாவை நேரில் வாழ்த்தினார். ”இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள மனோஜ் – லோகப்ரியா இருவரும், கலைஞரும் – தமிழும் போல, முதலமைச்சர் அவர்களும் – உழைப்பும் போல வாழ்க! வாழ்த்தி மகிழ்ந்தார்.





கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகர் மதுரையில் 44 ஆண்டுகளுக்கு முன்பு கழக இளைஞர் அணியைத் தொடங்கி வைத்ததறிவோம்! இளைஞரணி பிறந்த அதே மதுரை மண்ணில், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலில், மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட எஸ்.எஸ்.காலனி பகுதியில் கலைஞர் நூலகத்தை கழக இளைஞரணி சார்பில் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். “மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்கள் – மாணவர்கள், கலைஞர் நூலகத்தைப் பயன்படுத்தி வாழ்வில் மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்” என்று உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தமிழ்நாட்டின் முக்கியமான பேருந்து நிலையமான மதுரை மாட்டுத்தாவணிப் பேருந்து நிலையத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார். பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் அமருமிடம் – காத்திருப்பு அறை – கழிவறை – பேருந்துகள் இயக்கம் தொடர்பான தகவல் மையம் – காவல் உதவி மையம் போன்ற இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்தார். பேருந்துக்காகக் காத்திருந்த பயணிகளிடம் கலந்துரையாடி, பேருந்து நிலையத்தில் உள்ள வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் அடிப்படையிலும், பொதுமக்களின் கருத்துக்களை முன் வைத்தும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் – அலுவலர்களை அறிவுறுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணிக்கு அளித்த பணிகளில் முக்கியமானது, சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ‘கலைஞர் நூலகம்’ அமைக்கும் பணி எனின், அது மிகையல்ல! தமிழ்நாடெங்கும் இளைஞரணி சார்பில் இந்நூலகங்களைத் திறந்து வரும் நிலையில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் உள்ள மதுரை கிழக்குத் தொகுதிக்கான ‘கலைஞர் நூலகத்தை’ ஒத்தக்கடையில் நேற்று காலை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.